# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.302/2015 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 30 ( PW– 30 ) |
| பெயர் | :– | சம்பத் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01–ஆம், 03–ஆம், 04–ஆம், 05–ஆம், 06–ஆம் எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் புலனாய்வில் சொன்ன வாக்குமூலத்தில் எதிரி அருண்குமாரின் ஒப்புதலுரையில் தன் மனைவி மகன், தாயாருடன் குடியிருப்பதாகவும் ஐந்து சாலையில் பிளக்ஸ்போர்ட் தயார்செய்யும் கடையில் வேலைசெய்ததாகவும் எதிரி சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் புலனாய்வில் சொன்ன வாக்குமூலத்தில் எதிரி அருண்குமார் தன்னிடம் எதிரிகள் கிருபாகரன், மேகநாகன், சந்தோஷ்குமார் ஆகியோர் தனது நண்பர்கள் என்றும் அனைவரும் சேர்ந்து மது அருந்துவோம் என்றும் ஜாலியாக இருப்போம் என்றும் எதிரி அருண்குமார் சொன்னதாக புலனாய்வின்போது சொன்ன வாக்குமுலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 03 மாதம் முன்பு மது அருந்தி ஜாலியாக இருந்தபோது ஒரு வேலைசெய்து கொடுத்ததால் உரூபாய் கொடுப்பதாக கிருபாகரன் சொன்னதாகவும் தங்களுக்கு பணம் தேவைப்பட்டதால் அதனை செய்வதற்கு ஒப்புக் கொண்டதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

கிருபாரன் அரியானூர் ஐய்யங்கார் பேக்கரியில் வைத்து தேநீர் சாப்பிட்டு கொண்டிருந்தபோது சுந்தரமூர்த்தியை தங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் என்றும் விஜயன் தனக்கு மிகவும் தொல்லை கொடுத்ததாகவும் அவனை தீர்த்துக்கட்டினால்தான் தனக்கு நிம்மதி கிடைக்கும் என்றும் சுந்தரமூர்த்தி சொன்னதாகவும் அதனை அருண்குமார் அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சுந்தரமூர்த்தி தங்கள் நான்கு பேரையும் அழைத்துச் சென்று விஜயரை அடையாளம் காட்டியதாகவும் பின்பு நாங்கள் நான்கு பேரும் திரும்பி விட்டதாகவும் 03 முறை சென்று தாங்கள் விஜயனின் நடமாட்டத்தை கண்காணிப்பதாகவும் விஜயன் அடிக்கடி அரியானூர் வந்து சென்றதை நாங்கள் உறுதிப்படுத்தி கொண்டதாகவும் எதிரி அருண்குமார் சொன்னதாக புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் 01.09.2014-ஆம் தேதியன்று நான்கு பேரும் இருச் சக்கர வாகனத்தில் சென்று குமார் உணவகத்தில் பேசிக் கொண்டிருந்தோம் என்றும் உணவு அருந்திவிட்டு விஜயனை பார்ப்பதாக காத்துக் கொண்டிருந்தோம் என்றும் அன்று இரவு 08.00 மணிக்கு விஜயன் அவரது மொபட்டில் அரியானூரை நோக்கி வந்ததாகவும் அவர் திரும்பி வரும்வரை காத்துக்கொண்டிருந்தோம் என்றும் இரவு 09.00 மணிக்கு விஜயன் திரும்பி வரும்போது அருண்குமார், சந்தோஷ்குமார் ஆகியோர் விஜயனை குறுக்காட்டி நிறுத்தியதாகவும் நாங்கள் 05 பேரும் சேர்ந்து விஜயன் தென்னந்தோப்பிற்கு அழைத்து சென்றோம் என்றும் எதிரி அருண்குமார் சொன்னதாக புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் 01-ஆம் எதிரி என் நிம்மதியே போய்விட்டது என்று சொல்லி விஜயனின் வயிற்றில் கத்தியால் குத்தியதாகவும் 04 பேர்

விஜயனை அழுத்தி பிடித்ததாகவும் அந்த சமயத்தில் கிருபாகரன் விஜனின் கழுத்தை அறுத்துவிட்டதாகவும் விஜயனின் உயிர் போகும்வரை தாங்கள் அங்கு இருந்ததாகவும் 01-ஆம் எதிரி அவரது தோட்டத்திற்கு போய்விட்டார் என்றும் பின்னர் தாங்கள் நால்வரும் இருச் சக்கர வாகனத்தில் வீட்டிற்கு திரும்பி விட்டதாகவும் எதிரி அருண்குமார் சொன்னதாக புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் மீதி பணம் தன்னிடம் தரவில்லை என்றும் 11.11.2014-ஆம் தேதியன்று 02-ஆம் எதிரி ஓமலூர் நீதிமன்றத்தில் சரணடைய போவதாக சந்தோஷ்குமார் சொன்னார் என்றும் நானும் சந்தோஷ்குமாரும் ஓமலூர் சென்று 02-ஆம் எதிரியை பார்த்தோம் என்றும் சுந்தரமூர்த்தி நீதிமன்றத்தில் சரணடைய போவதால் கிருபாகரன் தானும் சரணடைய போவதாக எதிரி அருண்குமார் சொன்னதாக புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வம் புலனாய்வின்போது எதிரி கிருபாகரன் தங்களிடம் காவல் துறையினரிடம் மாட்டிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொன்னதாகவும் மேலும் வழக்கறிஞருக்கு கட்டணம் செலுத்து வசதி இல்லாத காரணத்தினால் சரணடைந்ததாக எதிரி அருண்குமார் சொன்னதாக புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

விஜயனை நாங்கள் 05 பேர் சேர்ந்து கொலை செய்ததாகவும் கிருபாகரனும் சுந்தரமூர்த்தியும் நீதிமன்றத்தில் ஆஜராகி விட்டதாகவும் அதனால் நான் உங்களிடம் ஆஜராகிறேன் என்றும் என்னை காவல் துறையினரிடம் ஒப்படையுங்கள் என்று அரசு தரப்பு 06-ஆம் சான்றாளர் செல்வதிற்கு பொய்யாக சொல்லிக்கொடுத்து நீதிமன்றத்தில் சொல்ல வைத்தோம் என்றால் சரியல்ல.

விஜயனின் கொலை வழக்கு சம்மந்தமாக 05-ஆம் எதிரியை காவல் நிலையத்தில் பொய்யாக பிடித்து வைத்திருப்பதாக 05-ஆம் எதிரியின் தாயாரும் உறவினர்களும் சேலம் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து அதுச் சம்மந்தமாக என்னிடம் காவல் கண்காணிப்பாளிடம் இருந்து விசாரித்தனர் என்றால் எனக்கு நினைவில்லை. கேட்டு இருக்கலாம். நான் அவ்வாறு யாரையும் சட்டவிரோதமாக அடைத்து வைத்திருக்க -வில்லை. 05-ஆம் எதிரியை சட்டவிரோதமாக காவலில் வைத்திருந்தபோது ஒப்புதலுரை புனையப்பட்டது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.